# "புகழ் அனைத்தும் உமதே"

## வாரம் 2020

## 16 – 24 மே 2020

## அனைத்தும் தொடர்புடையனவே!



**மனிதவள மேம்பாட்டு அலுவலகம்**
**காலநிலை மாற்றப் பிரிவு**
**ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு (FABC)**
**தமிழக சமூகப் பணி மையம் (TASSOS), திருச்சி**

**இணையதளப் பங்காளர்கள்**

ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டுக்கான வத்திக்கான் ஆணையம்

உலகளாவிய கத்தோலிக்க காலநிலை இயக்கம்

# “புகழ் அனைத்தும் உமதே”

## வாரம் 2020

## 16–24 மே 2020

அனுமதி

**மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்**

தலைவர், தமிழக ஆயர் பேரவையின்

திருவழிபாட்டுப் பணிக்குழு

தயாரிப்பு

**அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்**

பொதுச் செயலர்

தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்

2020

வரலாற்றையே மாற்றும் நிகழ்வுகளின் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நல் உலகை எவ்வாறு கட்டியெழுப்பவேண்டும் என்பதை “புகழ் அனைத்தும் உமதே” (Laudato Si) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல் நமக்கு கற்பிக்கிறது. மக்கள் எல்லா இடத்திலும் ஒரு எதிர்பார்ப்புடன், நம்பிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதைக்கு ஒளியூட்ட இறை நம்பிக்கை நம் உடனடித் தேவையாக உள்ளது. மே 16–24, 2020–ஐ முன்னிட்டு “புகழ் அனைத்தும் உமதே” வாரத்தைக் கொண்டாட நேர்மையான, நிலையான எதிர்காலத்திற்காக கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் தோழமையில் ஒன்றிணைகின்றோம். சிறந்த நாளைய எதிர்காலத்தை கட்டியெழுப்பும் வண்ணமாக இந்நெருக்கடியான காலத்தில் சகோதர, சகோதரிகளாக நம்பிக்கையில் ஒன்றிணைந்து நிற்கிறோம்.

**எனவே நாம் செய்யவேண்டியவை :**

- மே 16–23 வரை மேற்கண்ட இலக்கினைச் சிந்தித்து சமூகத் தொடர்பு ஊடகங்கள் வழியாக இதற்காகத் தயாரிக்கலாம், தியானிக்கலாம்.
- மே 24, 2020–ல் உலகளாவிய இறைவேண்டல் நாளில் இணையலாம்.
- நாம் தயாரிப்பவற்றை 2020 செப்டம்பர் 1–லிருந்து அக்டோபர் 2020 வரையிலான படைப்பின் காலத்தின்போது செயல்படுத்தலாம்.

**பல்வேறு மூலங்களிலிருந்து இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கிறது**

| தேதி | நாள் | பரிந்துரைக்கப்படும் செயல்பாடு |
|---|---|---|
| 16 மே 20 | சனி | ஆன்ம சோதனை |
| 17 மே 20 | ஞாயிறு | படைப்பிற்காக “புகழ் அனைத்தும் உமதே” செபம் |
| | | You Tube–ல் காணொளி பார்த்து தியானித்தல் |
| 18 மே 20 | திங்கள் | செபமாலை செபித்தல் – மகிழ்வின் மறையுண்மை |
| 19 மே 20 | செவ்வாய் | செபமாலை செபித்தல் – துயரின் மறையுண்மை |
| 20 மே 20 | புதன் | செபமாலை செபித்தல் – மாட்சியின் மறையுண்மை |
| 21 மே 20 | வியாழன் | செபமாலை செபித்தல் – ஒளியின் மறையுண்மை |
| 22 மே 20 | வெள்ளி | கார்பன் பதிவுக்கான அமர்வு |
| | | இறை இரக்க செபமாலை |
| 23 மே 20 | சனி | “புகழ் அனைத்தும் உமதே” உறுதிமொழி |
| | | தனிப்பட்ட அர்ப்பணம் |
| 24 மே 20 | ஞாயிறு | இயற்கையோடு இணைந்து வாழ நடைமுறைப் பரிந்துரைகள் – சிந்திக்க, தியானிக்க |
| | | உலகளாவிய இறைவேண்டல் நாள் |

# படைப்பின்மீது நமது அக்கறை

## (LAUDATO SI = புகழ் அனைத்தும் உமதே!)

## 17 மே 2020, ஞாயிற்றுக்கிழமை

முதல்வர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே நாம் அனைவரும் ஒன்றுகூடியுள்ளோம். ஆமென்.

### தொடக்க மன்றாட்டு

இறைவா, படைப்புகளை ஒரு கொடையாக எமக்கு அருள்பவரே, நாங்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி வந்துள்ளோம். உமது அழைப்பிற்கு நாங்கள் செவிமடுக்க, எங்களுக்குத் துணைபுரிய உம்மை வேண்டுகிறோம். அதனால் நீர் எங்கள் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ள கொடைகளை நாங்கள் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆய்ந்தறியவும்; எங்கள் பூவுலகிற்கும், உலகெங்கும் ஏழ்மையில் வாழ்வோருக்கும் நாங்கள் துணைபுரிபவர்களாக வாழவும் அருள்புரியும். எங்கள் மன்றாட்டுகளைக் கேட்டு, எங்கள் இதயங்களை நிறைத்து, உம்மில் நாங்கள் ஒன்றாக இருக்கச் செய்யும்.

முதல்வர் : கத்தோலிக்க சமுகப் போதனையின் வழிகாட்டுதல்களில் ஒன்று படைப்பின் மீதுள்ள கரிசனை ஆகும். அந்த படைப்பிற்கு நாம் செய்யும் பணிவிடையின் வழியாக, படைத்தவருக்கே நமது மரியாதையை நாம் காட்டுகிறோம்.

கடவுளின் படைப்புகள் அனைத்தோடும் உள்ள உறவில் நம்பிக்கை வைத்து வாழ்வதன் வழியாக, நாம் இப்பூவுலகையும் மக்களையும் பாதுகாக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

இந்த பொறுப்பை நிறைவேற்றுகின்ற கடமைக்குரிய நம் செயல்களில் நாம் பற்றுறுதி மிக்கவராக இருக்கின்றோம்.

இந்த அழைப்பில் மென்மேலும் வளரவும், அன்பினால் சுதந்திரமாக இயேசுவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றவும் இந்த இறைவேண்டல் நமக்கு உதவி செய்யும்.

வாசகர் : இந்த முழு பிரபஞ்சமும் கடவுளின் அன்பைப் பற்றியும், அவரது நமக்கான முடிவில்லா அன்பைப் பற்றியும் பேசுகிறது. மண், நீர், மலைகள்: அவை அனைத்தும் உள்ளது போல், கடவுளின் ஒரு அக்கறை எனலாம். கடவுளுடனான நமது நட்பின் வரலாறு எப்போதும் தனிப்பட்ட அர்த்தத்தை வழங்கும் ஒரு குறிப்பிட்ட இடத்தோடு தொடர்புடையதாக இருக்கும்; நாம் அந்த இடங்களை திரும்பவும் நம் நினைவிற்குக் கொண்டு வருதலும், பழைய அனுபவத்தைத் திரும்பப் பெறுவதும் எப்போதும் நன்மை பயக்கும். மலைப் பகுதிகளில் பிறந்து வளர்ந்தவர்கள் அல்லது ஊற்றுகளின் அருகில் அமர்ந்து நீர் பருகியவர்கள், வாழ்விடச் சதுக்கங்களில் விளையாடியவர்கள்; அவ்விடங்களுக்குப் பயணம் மேற்கொள்வது அவர்களின் உண்மையான சுயத்தின் சிறு பகுதியை மீட்டெடுக்க உதவும் வாய்ப்பாக அமையும் (புகழ் அனைத்தும் உமதே, 84).

முதல்வர் : உங்கள் கண்களை மூடி, நீங்கள் ஒரு திறந்த வெளியில் நிற்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் காலடிகளின் கீழ் உள்ள பூமியை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். 'நம் தாய் பூமி'யிடம் இருந்து நீங்கள் பெறுகின்ற உணவுப் பொருள்களுக்கு நன்றியுணர்வு மிக்கவர்களாகவும் அவற்றுக்காக வியப்பு அடைபவர்களாகவும் இருங்கள்.

### அமைதியான இறைவேண்டல்

### காற்று

வாசகர் : தொல்லைகளுக்குள்ளாகி பயனற்றுக் கிடக்கும் பூமியே கைவிடப்பட்டு தவறாக நடத்தப்படுகின்ற நமது ஏழைகளில் உள்ளது; அது "பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது" (உரோ 8:22). நாமே மண்ணாக இருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிட்டோம் (காண். தொநூ 2:7); நமது உடல்கள் பூமியின் பல்வேறு கனிமங்களால் உருவாக்கப்பட்டுள்ளன, அவளது காற்றையே சுவாசிக்கின்றோம், அவளது தண்ணீரிலிருந்துதான் நாம் வாழ்வையும், புதுதெம்பையும் பெறுகின்றோம். ஒவ்வோர் ஆண்டும் கோடிக்கணக்கான டன்கள் அளவுக்கு கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. அவை பெருமளவு மறுசுழற்சிக்கு இயலாததும், மிகுந்த நஞ்சுள்ளதும், கதிரியக்கமுடையதாகவும் உள்ளன. இக்கழிவுகள் இல்லங்கள் தொடங்கி தொழில்துறை

களிலிருந்தும், கட்டுமானப் பணிகளிலிருந்தும் கட்டட இடிப்புகளிலிருந்தும், மருத்துவம், மின்மம் மற்றும் தொழிற்சாலை சார்ந்த இடங்களிலிருந்தும் உருவாகின்றன. நமது இல்லமாகிய பூமி ஒரு மிகப் பரந்த கழிவுப் பொருள் குவியலாகக் காட்சி அளிக்கத் தொடங்கியுள்ளது (புகழ் அனைத்தும் உமதே, 2 & 21).

முதல்வர் : நீங்கள் சுவாசிப்பதை உணர்ந்து பாருங்கள். கொடையாக தரப்பட்டுள்ள காற்றுக்கு நன்றி மிக்கவர்களாக இருங்கள். பூமியின் வான் மண்டலத்துடைய தூய்மையை உங்கள் குரலால் எடுத்துரைக்கத் தீர்மானியுங்கள்.

**அமைதியான இறைவேண்டல்**

## நெருப்பு (தீ)

வாசகர் : பருவநிலை மாற்றம் அனைத்துலகையும் பாதிக்கும் மோசமான பாதிப்புகளைக் கொண்டுள்ள ஒரு பிரச்சினை: சுற்றுச்சூழல், சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பொருள்கள் பரிவர்த்தனை போன்றவை இவற்றில் அடங்கும். நமது நாள்களில் மனித குலம் சந்திக்கும் முதன்மையான சவால்களில் ஒன்றை இது குறித்துக்காட்டுகிறது வருத்தப்படக்கூடிய விதத்தில் இப்படிப்பட்ட துன்பம் குறித்த பரவலான கண்டுகொள்ளாமை காணப்படுகிறது, இப்போதும் உலகமனைத்திலும் இத்துன்பம் இடம் பெற்றுள்ளது. நமது சகோதர, சகோதரிகளை பாதிக்கின்ற இத்துன்பம் குறித்த நமது பதிலளிப்பின்மை, சக மனிதனுக்கான நமது கடமை உணர்வின் இழப்பையே குறிக்கிறது! இந்த கடமை உணர்வில் தான் எல்லா சமூகமும் கட்டப்பட்டுள்ளது (புகழ் அனைத்தும் உமதே, 25).

முதல்வர் : உங்கள் கைகளைத் திறந்து மூடுங்கள். இவ்வாறு செய்வதற்கான ஆற்றல் சூரிய சக்தியினின்று கிடைக்கின்றது. இந்த சக்தி நாம் உண்ணும் தாவரங்களால் பெறப்பட்ட சூரிய சக்தியாகும். சூரியனின் ஆற்றலில் அகமகிழுங்கள். இன்றைய உலகில் மானிடர் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்றாக இருக்கும் காலநிலை மாற்றத்தை ஆற்றலோடு எதிர்கொள்ளத் தீர்மானியுங்கள்.

**அமைதியான இறைவேண்டல்**

வாசகர் : பாதுகாப்பான குடிநீருக்கான வாய்ப்பு ஓர் அடிப்படையான சர்வதேச மனித உரிமை ஆகும். நமது உலகம் பாதுகாப்பான குடிதண்ணீருக்கு வாய்ப்பில்லாத ஏழைகளுக்கு ஒரு முக்கியமான சமூகக் கடனுக்கு உள்ளாகியுள்ளது. ஏனெனில், அவர்களின் மறுக்க முடியாத மாண்புக்கு ஏற்ற ஒரு வாழ்வுக்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது (புகழ் அனைத்தும் உமதே, 30).

முதல்வர் : மீண்டும் மூச்சை இழுத்து நன்றாக சுவாசியுங்கள். சுவாசிக்கும் எல்லா படைப்புகளுடைய உடல்களின் வழியாகப் புகுந்து வெளிவந்துள்ள நீரின் அணுத்திரள்களை உள்வாங்குங்கள். தண்ணீர் என்னும் கொடைக்காக நன்றி மிக்கவர்களாக இருங்கள். அதை மரியாதையோடும் நீதியோடும் பயன்படுத்தத் தீர்மானியுங்கள்.

***அமைதியான இறைவேண்டல்***

## நம்பிக்கைப் பகிர்வு

பின்வரும் வினாவைப் பற்றி ஒரு குடும்பம் / குழு சிறிது நேரத்திற்குக் கருத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். 'புகழ் அனைத்தும் உமதே' (Laudato si) என்னும் சுற்றுமடலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுற்றுச்சூழல் பற்றிய கரிசனைகள் அனைத்தும் நமது விருப்பிற்குரியதோ இரண்டாந்தர மானதோ அல்ல என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்; மாறாக, அவை நமது கிறிஸ்தவ நம்பிக்கை அனுபவத்தோடு தொடர்புள்ளவை. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் படைப்பிற்கான கரிசனை பற்றிய செய்தியை நாம் எவ்வாறு செயல்படுத்த முடியும்.

## இறுதி மன்றாட்டு

திருத்தந்தை பிரான்சிஸின் டுவிட்களை ஒட்டிய சிந்தனை.

வாசகர் : "அமைதிக்கான குரல் உலகெங்கும் ஒலிக்கட்டும்."

எல்லாரும் : ஆண்டவரே, என்னை உமது அமைதியின் கருவியாய் மாற்றியருளும்.

வாசகர் : "வெறுப்பும் இருளும் எங்கே உள்ளதோ, அங்கே ஒரு மனித முகத்தைக் கொணரும் வகையில் நாங்கள் அமைதியை உருவாக்கச் செய்யும்."

எல். : எங்குப் பகைமை உள்ளதோ, அங்கு நான் அன்பை விதைக்கச் செய்யும்.

வாசகர் : ‘‘கடவுள் நம்மீது மிகவும் இரக்கம் கொண்டுள்ளார். நாமும் கூட இரக்கம் உள்ளவர்களாய் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், மிகக் குறிப்பாக துன்புறும் அனைவரிடமும் இரக்கம் காட்ட வேண்டும்.’’

எல். : எங்கு காயம் உள்ளதோ, அங்கே அமைதியைக் கொணரச் செய்யும்.

வாசகர் : ‘‘துன்பங்கள், சோதனைகள், தோல்விகள் ஆகியவற்றைத் துணிவுடனும் எதிர்நோக்கோடும் எதிர்கொள்வது எப்படி என கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளார்கள்.’’

எல். : எங்கே ஐயம் உள்ளதோ, அங்கே நம்பிக்கையை அளித்தருளும்.

வாசகர் : ‘‘நம்பிக்கையை நாம் ஒருபோதும் இழத்தல் ஆகாது; இடைவிடாது நாம் தேடிக்கொண்டிருந்தால், கடவுள் நம்மைத் தம் அருளால் நிறைக்கிறார்.’’

எல். : எங்கு அவநம்பிக்கை உள்ளதோ, அங்கே எதிர்நோக்கை அளிக்கிறார்.

வாசகர் : ‘‘நம்பிக்கையின் ஒளி நம்முடைய எல்லா உறவுகளையும் ஒளிர்விக்கிறது; அவற்றோடு கிறிஸ்துவின் அன்புடன் ஒன்றித்து வாழ்ந்திடவும், கிறிஸ்துவை போல் அவற்றை வாழ்ந்திடவும் உதவுகின்றது.’’

எல். : எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ, அங்கு ஒளியை தருகின்றது.

வாசகர் : ‘‘கிறிஸ்துவை மிக நெருக்கமாகப் பின்பற்ற விரும்பினால் எளிதான, அமைதியான ஒரு வாழ்வை நாம் தேர்ந்துகொள்ள முடியாது. மாறாக அது துன்பம் நிறைந்த, அதே வேளையில் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைத் தரும்.’’

எல். : எங்கு மனக்கவலை உள்ளதோ, அங்கே அகமகிழ்வைத் தருகிறது.

வாசகர் : ‘‘இயேசுவை நமது வாழ்வில் நுழைய அனுமதிப்போம்; நம்முடைய தன்னலம், கண்டுகொள்ளாமை, பிறறோடு திறந்த மனதுடன் இல்லாமை ஆகியவற்றை விட்டுவிடுவோம்.’’

எல். : தலைவராகிய எம் இறைவா, நான் ஆறுதல் பெறுவதைவிட, பிறருக்கு ஆறுதல் அளிக்கச் செய்தருளும்.

வாசகர் : “மனிதக் கணிப்புகளையும் ஐயத்தையும் விடுத்து, ஏழைகளை புரிந்துகொண்டு அன்பு செய்யும் பண்பை ஆண்டவர் நமக்கு அருளுமாறு இறைஞ்சுவோம்.”

எல். : புரிந்து கொள்ளப்படுவதைவிட, நாங்கள் பிறரைப் புரிந்து கொள்ள உதவும்.

வாசகர் : “கடவுள் நம்மை அன்பு செய்கிறார். அன்பு செய்வதிலும், அன்பு செய்யப்படுவதிலும் உள்ள மேன்மையை நாம் கண்டுணர்வோமாக.”

எல். : அன்பு செய்யப்படுவதை விட, பிறரை அன்பு செய்ய அருளும்.

வாசகர் : “தன்னலத்திற்கு இடம் கொடுத்து, கடவுளுக்கு ‘இல்லை’ என செல்லும் ஒவ்வொரு முறையும், நமக்கான அவரது அன்பின் திட்டத்தை நாம் கெடுக்கிறோம்.”

எல். : கொடுப்பதனால்தான், நாங்கள் பெற்றுக்கொள்கிறோம்.

வாசகர் : “நாம் அனைவருமே பாவிகள். ஆனால் நாம் கடவுளுடைய மன்னிப்பின் மகிழ்ச்சியை அனுபவித்து, அவருடைய இரக்கத்தில் உண்மையாகவே முன்னேறிச் செல்கிறோம்.”

எல். : மன்னிப்பதில் நாம் மன்னிக்கப் பெறுகிறோம்; இறப்பினால் நாம் நிலைவாழ்விற்குப் பிறக்கிறோம். ஆமென்.

**குறிப்பு :**

**மொழியாக்கத்தில் உதவிய அருள்பணி. S. ஆரோக்கியராஜ், அருள்பணி. ம. பிலோமின்தாஸ் அவர்களுக்கு நன்றிகள்.**